**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109452

1. District மாவட்டம்: Thiruvallur PS காவல்நிலையம்: Vigilance & Anti-Corruption Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 8/AC/2023/TVL Date நாள்: 12/7/2023 at 17:00 hrs

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: U/s. 7.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 06/7/2023 at about Date to நாள் வரை: 11/7/2023 at about 13:00 hrs in the o/o. the Forest Ranger Gummudipoondi Range, Madharpakkam, Thiruvallur Dt.
Time Period நேர அளவு Time from நேரம் முதல்: 11:00 hrs in the o/o. DFO, Thiruvallur Time to நேரம் வரை:
(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 12/7/2023 Time நேரம்: between 15:00 hrs and 16:00 hrs.
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 12/7/2023 Time நேரம்: at 17:00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Oral statement was recorded as complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: North-East, about 50 kms
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி: Forest Range office, Gummudipoondi Range, Madharpakkam, Thiruvallur Dt.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: Tr. P. Muni babu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 40 years (d) Nationality : நாட்டினம்: Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்: — Place of Issue : வழங்கப்பட்ட இடம்: —
(f) Occupation : தொழில்: Field Manager in JSSN Farm pvt Ltd., (g) Address : முகவரி: No. 5-447, Satellite Colony, Varadhaiyapalayam village, Thirupathi District, AP State.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Accused - Tr. Gnanappan, Forest Range Officer, Gummudipoondi Range, Madharpakkam, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—Nil—

Seen [signature] 13/07/2023
[signature] 13/07/23

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded bribe amount of Rs. 5,000/- for making arrangements to get the transit permit from DFO, Thiruvallur.

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: When I present at Thiruvallur Vigilance & Anti-corruption Office on 12/7/2023 at 15.00 hrs, one Complainant Tr. P. Munibabu, age-40, s/o. Munusamy Naidu, residing at No. 5-447, Satellite Colony, Varadhaiyapalayam Village, Thirupathi District, AP State appeared before me and gave his oral statement as complaint against the accused Tr. Gnanappan, Forest Range Officer, Gummudipoondi Range, Madhavapalayam, Thiruvallur District and the same oral statement was reduced into as a complaint, recorded by me, it as follows:-

[FIR contents will follow in the next separate page......]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K.S.TAMIZHARASI Rank ... Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS....... VVAC, Thiruvallur .........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............—............ பதவி ..........—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..........................—.................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Munibabu 12.07.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

12/7/2023

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13/07/2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.30 hrs

Name: பெயர் ....... K.S.TAMIZHARASI
Rank: நிலை ... INSPECTOR, VVAC, THIRUVALLUR. No. எண் .........

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)p.2

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.8/AC/2023/TVL, U/s. 7 of Prevention of Corruption Act – 1988 as amended in 2018, continues......)**

அனுப்புநர், திரு.P.முனிபாபு, வயது-40, த/பெ. முனுசாமி நாயுடு, எண்.5-447, சாட்டிலைட் காலனி, வரதய்யபாளையம் மண்டலம், திருப்பதி மாவட்டம், ஆந்திர பிரதேசம் மாநிலம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர். ஐயா, நான், ஆந்திரப் பிரதேச மாநிலம், திருப்பதி மண்டலம், வரதய்யபாளையம் கிராமத்தில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் கர்நாடாக மாநிலம் பெங்களூர், BTM 2nd street, BDA Flats No.LF9/6 என்ற விலாசத்தில் இயங்கிவரும் JSSN Exim Private Limited என்ற நிறுவனத்தின் Field Manager-ஆக கடந்த ஜூன்/2022 முதல் பணிபுரிந்து வருகிறேன். எங்களது நிறுவனத்தில் சட்டப்படி செம்மரங்களை வாங்கி அவற்றை அறுவடை செய்து துண்டுகளாக்கி, கிடங்கிற்கு எடுத்துச்சென்று, அதன் பட்டைகளை சீவி பாதுகாப்பாக வைத்து, என் ஓனர் மூலம் சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனமாகும். அதனால் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் எங்கெல்லாம் விவசாயிகள் செம்மரங்களை வளர்த்து விற்கிறார்களோ அவர்களை அனுகி வியாபாரம் பேசி முறைப்படி கிடங்கிற்கு கொண்டுவருவது என்னைப்போன்ற Field Manager-களின் பொறுப்பாகும். அதுபோல எனக்கு ஓரளவிற்கு தமிழ் பேசத்தெரியும் என்பதால் தமிழ்நாட்டிலிருந்து மரங்களை வாங்குவதிலிருந்து, கிடங்கிற்கு கொண்டு போகும்வரை எனது வேலையாகும். இந்த வேலையின்போது எந்த பிரச்சனை வந்தாலும் அதனை சரிசெய்து வேலையை முடிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது ஆகும். அதற்காக எனக்கு எழுத்துமூலமான அதிகாரமும் என் நிறுவனத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஜனவரி/2023-ந்தேதி முதல் தமிழ்நாட்டில் மாதர்பாக்கம் கிராமம் மற்றும் அதனை சுற்றிய பகுதிகளான பல்லவாடா மற்றும் தோக்கமூர் கிராமங்களில் செம்மரம் வளர்க்கப்பட்டு விற்பனைக்கு உள்ளதாக தகவல் தெரிந்து, நான் விசாரித்து அதன் விவசாயிகளை அடையாளம் கண்டு பேசியபோது, மாதர்பாக்கம் கிராமத்தில் திரு.நேசரத்தினம் என்பவரிடம் 3 மரங்களும், பல்லவாடா என்ற கிராமத்தில் திரு.ஆ.பிரகாசம் என்பவரிடம் 5 மரங்களும், தோக்கமூர் கிராமத்தில் திருமதி. கோவிந்தம்மாள் என்பவரிடம் 29 மரங்களும் மற்றும் திரு.மூர்த்தி என்பவரிடம் 5 மரங்கள் இருந்ததை விலை பேசி, அவற்றை அறுவடை செய்து அப்புறப்படுத்திக்கொள்ள அனுமதியை திருவள்ளூர் மாவட்ட வன அலுவலர் திரு.ராம்மோகன் என்பவரின் ந.க.எண்.6491/2022/எல், மற்றும் ந.க.எண்.8360/2022/எல், நாள்.04.02.2023-ந்தேதியிட்ட கடிதத்தின் படி (on condition basis) ஆணை வழங்கப்பட்டது. அதன்பின் மேற்குறிப்பிட்ட செம்மரங்களை ஆள் வைத்து அறுவடை செய்து, அதனை துண்டுகளாக்கி அந்தந்த

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.8/AC/2023/TVL, U/s. 7 of Prevention of Corruption Act – 1988 as amended in 2018, continues......)**

இடங்களில் வைத்துவிட்டு, அதனை கிடங்கிற்கு எடுத்துச்செல்லுவதற்காக அனுமதி கேட்டு, கடந்த 08.06.2023-ந்தேதி திருவள்ளூர் வனக்கோட்ட அலுவலகம் சென்று மாவட்ட வன அலுவலர் அவர்களிடம் வேறொருவர் மூலம் தமிழில் எழுதி கொடுத்ததில் கையொப்பம் செய்து மனு ஒன்றை கொடுத்தேன். அதனோடு படிவம் VI உடன் அனுமதி சீட்டு 4 எண்ணிக்கையில் கேட்டு கொடுத்தேன். ஏனெனில் எத்தனை முறை லோடு எடுத்துச்செல்ல முடியும் என்று தெரியாததால் நான் 4 எண்ணிக்கையில் கேட்டேன். அதன்பின் என்னை மாதர்பாக்கத்திலுள்ள கும்முடிப்பூண்டி வனச்சரக அலுவலரைப் பார்க்குமாறும், கூறியதால், நானும் மாதர்பாக்கம் கிராமத்திலுள்ள கும்முடிப்பூண்டி வனச்சரக அலுவலர் திரு.ஞானப்பன் அவர்களை பல முறை அவரது அலுவலகத்தில் பார்த்தேன். ஆனால் சரியாக என்னிடம் பேசுவது இல்லை. அதன்பிறகு கடந்த 06.07.2023-ந்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் திருவள்ளூர் மாவட்ட வன அலுவலகத்திற்கு சென்றபோது, அங்கு கும்முடிப்பூண்டி வனச்சரக அலுவலர் திரு.ஞானப்பன் அவர்களும் இருந்தார். அவரிடம் நான் சென்று, என்னுடைய அனுமதி ஆர்டர் குறித்து கேட்டபோது, சும்மா வெறும்கையில் வந்து கேட்டால் ஆர்டர் வந்துவிடுமா என்று கூறிவிட்டு, ரூ.10,000/-ம் கொடு, அப்போதுதான் என் அலுவலக முத்திரையை வைப்பேன். இல்லையென்றால் வருடம் முழுவதும் கட்டைகள் அங்கேயே இருக்க வேண்டியது தான் என்று சொன்னார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படியென்றால் என்னால் எதுவும் செய்யமுடியாது என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்பின் மறுநாள் போனேன். அவர் அலுவலகத்திற்கு வரவில்லை. மீண்டும் கடந்த 11.07.2023-ந்தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு அவரது அலுவலகத்திற்கு சென்று அவரை பார்த்து, எனது அனுமதி ஆர்டர் குறித்து கேட்டேன். அதற்கு அவர் நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நான் கேட்ட பணத்தை கொண்டுவந்துள்ளாயா என்று கேட்டார். நான் எங்கள் நிறுவனத்தில் சாதாரண தொழிலாளி அவ்வளவு பணம் எப்படி என்னால் கொடுக்க முடியும், என் ஓனரும் தரமாட்டார், அதோடு நான் வாங்கிய மரங்களில் 10 மரங்களுக்கு மேல் வேஸ்ட் ஆகிவிட்டது என்று என் நிலைமைய கூறியபோது, திரு.ஞானப்பன் அவர்கள் இந்த முறை ரூ.5,000/-ம் கொடு, அடுத்தமுறை இதே பணத்திற்கு அனுமதி கிடைக்காது என்று கோபமாக கூறிவிட்டு, பணத்தை கொடுக்குமாறு கேட்டார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்று கூறியதற்கு பணத்தை கொடுத்துவிட்டு வேலையை முடித்துக்கொள் என்று சொல்லியனுப்பினார். இதுதொடர்பாக என் ஓனரிடம் பேசினேன். அவர் சட்டப்படி அனுமதிப்பெற்று எடுத்துச்செல்லும் நாம் ஏன் லஞ்சமாக

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.7/AC/2023/TVL, U/s. 7 of Prevention of Corruption Act – 1988 as amended in 2018, continues......)**

பணம் கொடுக்க வேண்டும். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கூறியதால். நானும் கும்முடிப்பூண்டி வனச்சரக அலுவலர் திரு.ஞானப்பன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் தங்களிடம் புகார் கொடுக்க இன்று 12.07.2023-ந்தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு தங்கள் அலுவலகத்திற்கு வந்தேன். மேலும் தாங்கள் எடுக்கும் சட்டப்படி நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன். மேலும். மேற்படி வனச்சரக அலுவலர் திரு.ஞானப்பன் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-ஐ கொண்டுவந்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத. படிக்க தெரியாததால். நான் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் தமிழரசி ஆகிய தாங்களே கம்ப்யூட்டரில் ஒரு புகாராக டைப் செய்தீர்கள். பின்னர். அதனை எனக்கு படித்துக்காட்டினீர்கள். நான் சொன்னபடி சரியாக இருந்தது. அதனால் இந்த புகாரில் எனது கையொப்பத்தை போட்டு. எனது இடதுகை பெருவிரல் ரேகையையும் வைத்தேன். sdXXX.P.Munibabu, 12.07.2023 & LTI of P.Munibabu

**Sir,**

**The oral statement of the complainant was reduced into as a typed complaint, recorded by me. SdXXX(G.S.Tamizharasi), 12.**07.2023.

**Honoured Sir,**

The oral statement of the complainant was reduced into as a typed complaint on 12.07.2023 between 15.00 hrs and 16.00 hrs and after getting proper permission from DVAC on the complaint, a preliminary enquiry was conducted in a discreet manner. Based on the outcome of the preliminary enquiry, the antecedents of the accused, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register an FIR on the said complaint against the Accused Tr.Gnanappan, Forest Range Officer, Gummudipoondi Range, Madharpakkam, Thiruvallur District, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.8/AC/2023/TVL u/s. 7 of The Prevention of Corruption Act-1988 as amended in 2018 today on 12.07.2023 at about 17.00 hrs and took-up investigation.

12/7/2023

**(G.S.TAMIZHARASI),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.